திருக்குறள் பதிப்பக வெளியீடு 3.

உ

ஆதிபகவன் துணை.

வள்ளுவர் வகுத்த நம்நாட்டு சட்டங்கள்.

இஃது
இராசிபுரம்
R. K. அரங்கசாமி அவர்களால்
தொகுக்கப்பட்டது.

திருக்குறள் பதிப்பகம்
இராசிபுரம், சேலம் Dt.,

1946

விலை அணா : : 0—4—0

முன்னுரை.

அன்பர்களே!

நம்நாட்டுப் பண்டையத் தலைவர்களின் கருத்துக்களை நாம் நன்கு படிக்கவேண்டும். அதன்பிறகு அவ்வக்காலங்களில் இடையிடையே தோன்றிய நூல்களைப் படிக்கவேண்டும். அதற்குமேல் இக்காலத்தில் தோன்றும் புத்தகங்களைப் படிக்கவேண்டும். அதே மாதிரி நம்நாட்டுப் பண்டைய அறிஞர்கள் நீதிகளை, வழிகளை, ஒழுக்கங்களை எப்படி வகுத்திருந்தனர் என்று பார்க்கவேண்டும். அதன்பிறகு இடையிடையே தோன்றிய மதங்கள், எதை மாற்றி புதிதாக வழிகள் கண்டுபிடித்துள்ளார்கள் என்று பார்க்கவேண்டும். அதற்குமேல் இன்றைய கொள்கைகள் என்ன கூறுகின்றன என்று ஆராயவேண்டும். அப்படி ஆராய்ந்தால் இடையில் தோன்றியுள்ள மதங்கள், சமயங்கள் யாவும் முதலாவதாக தோன்றிய பண்டைய அறிஞர்களின் கருத்துக்களை விளக்கவந்த சில கூட்டங்கள் என்பது நன்கு விளங்கும்.

ஒவ்வொரு மதமும் தொன்னூற்களிலுள்ள சில நீதிகளை மக்களுக்கு விளக்கவந்ததை உணராமல் அவ்வக்கூட்டத் தலைவர்கள் அப்படியே தலைமை வகித்து, அக்கூட்டங்களுக்கு மதங்களென்னும் பெயர் வைத்து மக்களை பிளவுபடுத்தி விட்டார்களே தவிர பண்டைய கொள்கைகளிலுள்ள கடவுளில் பிளவு இல்லை, நீதியில் பிளவு இல்லை, வாழ்க்கையில் பிளவு இல்லை, ஞானத்தில் பிளவு இல்லை, அப்படிப்பட்ட சமத்துவமுள்ள நம்மிடையே நீதியை விளக்க வந்த மதங்கள் தங்களின் உண்மையான அன்பு, ஒற்றுமை இன்பம், சமத்துவங்களை மறந்து மதத்திற்கு மதம் போர், பிளவு, பேதம், சச்சரவுகளை விளைவிக்க உதவுகிறது. ஆரம்பிக்கிறது.

இந்நிலையில் நம்பண்டைய உரிமைகளை ஆராயப் புகும்போது எம்மதமும் பண்டைய அறிஞர்களின் கூற்றைவிட கடுகளவும் புதிய வழிகளை கண்டுபிடித்ததாக இல்லை என்பதற்கு திருவள்ளுவர் திருக்குறளே சான்றாகும். திருக்குறளில் பண்டைய அறிஞர்கள் கருத்துக்களெல்லாவற்றையும் ஒன்று திரட்டி ஓர் வடிவாக்கியிருப்பதை ஆய்ந்தோர் அறிவர். ஆதலால் அன்பர்களே உங்கள் தொண்டும், உதவியும் திருக்குறளை படிக்க, பலரையும் படிப்பிக்க வார் வாராக புத்தகங்களை நீங்கள் அனுப்பி உதவிபுரிய முனைதல் வேண்டும்.

நம் வேதம் திருக்குறள்.
மனம்மொழி மெய்களால் வணங்கத்தக்கது திருக்குறள்.
ஒவ்வொரு வீட்டிலும் ஒளிபரப்பவல்லது திருக்குறள்.
என்று வாழ்த்தி வணங்கி படிப்போமாக.

அப்படிச் செய்வதால் எல்லா மதங்களுக்கும் திருக்குறள் பொது வேதம். எல்லா நாட்டிற்கும் திருக்குறள் பொதுமறை. பொதுவாக இவ்வுலகிற்கே திருக்குறள் பொதுநூல் என்பது தெரிந்து மக்கள் ஒன்றுபட்டு வாழ இடமேற்படும்.

அரங்கசாமி. 22-8-46

வள்ளுவர் வகுத்த நம்நாட்டு சட்டங்கள்.

இல்வாழ்க்கைத் திட்டங்கள்

2619

1. இறைவன் எண்ணம்போல் நட

உலகப்பொருள்கள் யாவற்றையும் தன்னகத்தே கொண்ட இறைவனின் புகழுக்குரித்தான பொதுத் தொண்டு புரிந்து வாழ்வார்க்கு நற்செயலாலும் தீச் செயலாலும் வரும் மயக்கங்கள் தம்மை அடையாது.

அதிகாரம்-1. குறள்-5.

2, காலத்தை வீணில் கழிக்காதே

ஒருவன் தன் வாழ்நாளில் ஒரு நாளேகூட பயனற்ற வீணுளாகக் கழிக்காமல் தனக்கோ பிறர்க்கோ உதவியான நற்செயலாற்றிவருவானுயின் அவன் வாழ் நாள் முழுவதும் இன்பமாகவே வாழ்ந்து முடிவில் இன்பமே அடைவான்.

அதிகாரம்-4. குறள்-8.

3. காப்பது விரதம்.

அயல் நாட்டிலிருந்து வரும் விருந்தினர்களேயும், அறிஞர்களேயும், சுற்றத்தினர்களேயும், தன் குடும்பத்தாரையும், தன்னேயும் உளமகிழ காப்பதே இல்லறமாண்பாகும்.

அதிகாரம்-5. குறள்-3.

4. பெண்களின் ஆற்றல்.

தன்னேக் காத்து தன்னே மணந்த கணவனேயுங் காத்துபழிச்சொற்கள் வாராமல் மானங்காத்து சோம்பலில்லாமல் துணிவுடன் வாழ்க்கையை நடத்தும் பெண்மணிதான் வாழ்க்கைத் துணைவி எனப்படுவாள்.

அதிகாரம்-6. குறள்-6.

5. அறிவுடை மக்களால் பெருமை கிடைக்கும்.

ஒழுக்கமும் அறிவும் உடைய நல்ல குழந்தைகளைப் பெறுவோமானால் அச்சிறப்பு ஏழுதலைமுறை வரைக்கும் குன்றாமல் விளங்கும்.

அதிகாரம்-7. குறள்-2.

6. தோடக்கப்படி நடக்கும்.

உடலும் உயிரும் முதலில் எப்படி அமைகிறதோ அவ்வியற்கை குணம் அவ்வுடலுயிர் இருக்குமளவும் மிகுந்து விளங்கும். மற்றையப் பழக்கங்களான் செயற்கை யறிவையுந்தாண்டி இயல்பு குணம் வந்துவிடுமாதலால் செயற்கைக் கல்வியையும்விட இயற்கை யமைப்பு மேலானது.

(இதனால் குழந்தையைப் பெறும் தாய்தந்தைகள் ஒழுக்க மிகுந்த உடலினராயும், சுத்தமான உள்ளத்தினராயும் இருத்தல் மக்களைக் காப்பதாகும்.) அதிகாரம்-38. குறள்-3.

7. அன்பே உயிருக்கு எலும்பு

எலும்பில்லாத புழுக்களை வெயில் எரிப்பதுபோல் பிறர்க்கு உதவி செய்தலென்னும் அன்பின் வலிவில்லாதாரை அறவழி துன்புறுத்தும். அதிகாரம்-8. குறள்-7.

8. பகுத்துண்டு வாழ்.

எவ்வளவு உயர்ந்த பஞ்ச அமிழ்தமாயினும், விருந்தினர்களை புறத்திலிருத்தி உண்பது குற்றமாகும்.

அதிகாரம்-9. குறள்-2.

9. இனிமையாக பேசு.

இன்பமான சொற்களைப் பேசுவதால் இனிய உயர்ந்த வழிகள் கிடைப்பது, தெரிந்திருந்தும் சிலர்

கடுமையான சொற்களைப் பேசி தாழ்வை அடைகின் றனரே; என்னே இவர் மதியீனம்.

அதிகாரம்-10, குறள்-9.

10. நன்மை செய்தால் நன்மையேயாகும்.

கொல்லத்தக்க பெருந்தீங்கை ஒருவருக்கு செய்ய முயலும்போது, அவர் எப்போதாயினும் ஒரு நன்மை செய்ததை நினைக்கும்போது அக்குற்றம் மறைந்து விடும்.

அதிகாரம்-11. குறள்-9.

11. வழக்கு தீர்த்தல்.

நிறைகோலானது நடுநிலையில் நின்று பொருளின் எடையைக் காட்டுவதுபோல், அறிவுடைச்சான்றோர் கள் நடுநிலையில் நின்று பொதுவாக நீதி செலுத்து வார்கள்.

அதிகாரம்-12 குறள்-8.

12. மதியாது பேசாதே.

நீங்கள் உமது உறுப்புகளில் எதை காக்காவிடி னும் விடுக, ஆனால் நாக்கை மட்டிலும் துடுக்காகவோ வசையாகவோ பேசவிடாதீர்கள். விட்டால் பேசத் தகாத பேச்சைப் பேசி பழிக்காளாக்கிவிடும்.

அதிகாரம்-13. குறள்.7.

13. முக்காலத்தையு முணர்ந்து பேசு.

அவ்வக்காலத்திற்கேற்ற கல்வியைக் கற்றில்லை யானல் அக்கல்லாதான் சொல் நல்லதாயினும் அறி ஞர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

அதிகாரம்-41. குறள்-4.

14. வீண்பேச்சு பலன் கொடுக்காது.

பேசிக்கொண்டிருப்பது யாவருக்கும் சுலபம். பேசியபடி செய்வதுதான் அரிது. ஆகையால் வீணுகப் பேசித்திரியாதே. செயலைச் செய்.

அதிகாரம்-67. குறள்-4.

15. உடலிலோ குணத்திலோ அழுக்கு சேராததே ஒழுக்கமாகும்.

ஒழுக்கமானது உயர்ந்த நிலையைக் கொடுப்பதால் யாவரும் உயிரைவிட ஒழுக்கத்தைப் பாதுகாப்பாற்றுங்கள்.

அதிகாரம்-14. குறள்-1.

16. மணக்காத பெண்ணை நினைக்காதே

பிறரின் மனையாளை இச்சித்து வஞ்சனையான நட்பால் ஏமாற்றுவது சுலபமென்று நினைப்பவர்கள், எப்போதும் நீங்காத இழிபெயரான பழியை தன் குடும்பத்திற்கு சுலபமாகத் தேடுபவர்கள் ஆவார்கள்.

அதிகாரம்-15. குறள்-5.

17. அறிஞரிடம் பொறுமை நிலவும்.

வெட்டினாலும் கொத்தினாலும் கூட பொறுத்துக்கொண்டிருக்கும் பூமியைப்போல உயர்ந்தோர்கள் தம்மை காரணமில்லாமல் பிறர் இகழ்ந்தாலும் வைதாலும் தாங்கிக்கொள்வர்.

அதிகாரம்-16. குறள்-1.

18. அறிஞர் கோபத்திற்கு ஆளாகாதே

நற்குணமென்னும் உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் கோபிக்கும்படியோ, கலங்கும்படியோ நடக்கலாகாது; நடந்தால் அவர்களின் சொல் உடனே பலிக்கும்.

அதிகாரம்-3. குறள்-9.

19. கெடுவான் கேடு நினைப்பான்.

மக்களுக்காக நல்லமுறையில் பொதுச்செயல் புரிபவர்களைப் பார்த்து பொருமைகொண்டு தடுக்க நினைக்கலாகாது. அப்படி நல்ல பலனைக் கொடுக்கும் செயலாற்றுவோரை தடுப்பவனின் குடும்பம் உணவும் உடையுமின்றி அலைய நேரும்

அதிகாரம்-17. குறள்-6.

20. அறிஞன் பிறரை ஆதரிக்கவேண்டும்

பிறர் பொருளை வஞ்சித்து அடைய எண்ணினால் நுண்ணறிவும் விரிந்த மதியும் பெருங்கல்வியும் கெடும்.

அதிகாரம்-18. குறள்-5.

21. வாழ்க்கையை உயர்த்து

ஒருவரையொருவர் புறங்கூறி அதனால் பல இடுக்கணை விளைவித்து வாழ்க்கையைக் கெடுப்பதைக் காட்டிலும் இறந்துபோவது தன் குடும்பத்திற்கு நல்லது செய்ததாகும்.

அதிகாரம்-19. குறள்-3.

22. மனிதத் தன்மையல்லாத நிலை

மக்களுக்குப் பயனில்லாத சொல்களையோ செயல்களையோ நடத்துமொருவன் மக்களில் பதர் ஆவான். (பதர்-போலி)

ஆதிகாரம்-20. குறள்-6.

23 தீங்கால் வந்த செல்வம் நிலைக்காது.

தன்னிடத்தில் பொருள் இல்லையே என்று அதற்காகப் பிறரைக் கெடுக்க நினைக்காதே. அப்படி வஞ்சித்துவரும் பொருள் மற்றொரு தீங்கான வழியில் போய்விடும்

அதிகாரம்-21. குறள்-5.

24 நல்லோர் செல்வம் பலன் கொடுக்கும்

அன்புகுணம் பொருந்தினவர்களுக்கு செல்வம் கிடைத்தால் ஊர் கிணற்றில் நீர் நிறைந்ததேபோல் எல்லாருக்கும் பயன்படும்.

அதிகாரம்-22. குறள்-5.

25 சீருடைச் செல்வம் சிறந்துவாழும்.

நல்ல அறிஞர்களுக்கு செல்வம் கிடைத்தால் பலன் நிறைந்த நல்ல மரங்கள் பழுத்ததை ஒக்கும். அப்பயன் எல்லா உயிர்களுக்கும்கூட பயன்படும்.

அதிகாரம்-22. குறள்-6.

26 இதுவுமது.

அன்புடனே நல்ல நயமும் பொருந்தினவர்களுக்கு செல்வம் சேர்ந்தால் விரும்பினவர் விருப்பத்திற்கேற்ற வாறு பயன் படும் அதாவது ஓர் மரம் நோய்க்கு மருந்தான இலை, பூ, விதையாயும் உணவுக்கான பழத்தையும், நிழலையும் பூவால் மணத்தையும் விறகு, சட்டம், விட்டமாகியும் அவரவர் விருப்பத்திற்கு உதவுவதேபோல் பயன் படும்.

அதிகாரம்-22. குறள்-7.

27 ஈகை இன்னதென்பது

தன்னிடத்தில் மிகுந்துள்ளதை பிறர் இல்லாமல் தேடும் சமயத்தில் தானே அழைத்து கொடுப்பதே ஈகையாகும் அப்படியில்லாமல் கேட்டு, கெஞ்சி, மிரட்டி, பின் கொடுப்பதெல்லாம் ஈகையாகாது.

அதிகாரம்-23. குறள்-1.

28 புகழ் நிலைக்க வாழ்

பிறந்தால் புகழோடு வாழ்வதற்கான செயல் புரிந்து புகழைத்தேட வேண்டும். இல்லையானால் பிறக்காமலிருந்திருப்பதே மேல். அதிகாரம்-24. குறள்-1.

29 புகழ் மறந்து பொருளையே சேர்க்கலாகாது.

மரம், செடி, கொடி, நீர், நிலை அறிஞர்கள் யாரு மற்ற ஓர் மேடுமாதிரி வீண் பணப்பொருள் என்ற ஒன்றை மாத்திரம் சேர்த்து மேடாக்கி புகழ் தரும் செயலை வளர்க்காத செல்வர்கள் தோற்றம் பூமிக்கு பாரம்தான். அதிகாரம்-101. குறள்-3.

துறவறவியல் (பொது வாழ்க்கை)

30 அன்பின் முதிர்ச்சியே அருளாகும்.

அருட்செல்வம், பொருட்செல்வம் என்ற இரண்டிலும் உயர்ந்தது அருட்செல்வமே ஆகும். எப்படி என்றால் எல்லாக்கலை வளங்களும் பொருந்தினவர்களுக்கே அன்பின் முதிர்ச்சியான அருள் செல்வம் பொருந்துகிறது. பொருள் செல்வமோ அறிவற்ற பேதையிடத்தும் தங்குகின்றன. ஆதலால் அறிவு நிறைந்த அருளே உயர்ந்ததாம். (அருள்-அன்பு நிறைவிடம்.) அதிகாரம்-25. குறள்-1.

31 ஊனுணவு தடிப்பு குணத்தைத்தரும்.

ஊன் தன்மையான மடமை நீங்குமிடத்துத்தான் அறிவு வளர்வதால் ஊனை உண்ணும் மந்த அறிவுடையவர்கள் நுட்பமான அறிவைப் பெறமாட்டார்கள்.

(தாவர உணவு சிறந்தது என்பதாம்.)

அதிகாரம்-26. குறள்-1.

32 தவத்தால் அனைத்தும் கிடைக்கும்.

எத்தனையோ வகையான பொருள்கள் நிறைந்திருந்தும் ஒன்றையுமடையாதவர்கள் பலரும் அடைந்தவர் சிலரும் இருப்பதற்குக் காரணம் என்னவெனில் ஒன்றைக்கருதி அதை அடையுமட்டும் விடாப்பிடியாக தவஞ்செய்யாதவர்கள் பலரும் எண்ணியதை எண்ணியபடி அடையுமட்டும் தவஞ்செய்கிறவர்கள் சிலருமாக இருப்பதேயாகும். (தவம்–மறவாமல் இருப்பது)

அதிகாரம் - 27 - குற - 10.

33 உள்ளது நிலைக்கும்.

தன்னுடைய நெஞ்சத்திலுள்ள குணங்களை தாழ்வாகவைத்துக்கொண்டு பெருமைக்காக தம்மை வானளாவப்புகழும்படி நடந்து கொண்டால் அப்பெருமை நிலைக்காது.

அதிகாரம்-28-குற-2.

34 அகத்திலுள்ளது முகத்தில் தெரியும்.

பிறர் நம்மை வெறுக்காமல் அன்புடன் இருக்க வேண்டுமானால் பிறர் பொருளைக்கவர எண்ணும் எண்ணத்திற்கு நெஞ்சு இடம் தரக்கூடாது (எண்ணத்தை முகம் பிறர்க்கு காட்டி பிளவை உண்டாக்கும்).

அதிகாரம்-29. குற-1.

35 பலரின் நன்மைக்காக சொல்வது பொய்யல்ல,

குற்றமில்லாத நன்மைகள் பலமக்களுக்குக் கிடைப்பது உண்மையானால் அதற்காக சிறிது மாற்றிச் சொல்வது பொய்யாகாது.

(பொதுத்தொண்டர்களின் கால தந்திரக் கூற்று)

அதிகாரம்-30. குறள்-2.

36 கோபத்தை அடக்கிவை.

உன்னை நீ பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானல் உன்னிடம் கோபம் வராமல் பாதுகாத்துக்கொள். இல்லையானல் உன்னை கொல்லும் திறனுடையது கோபம். (சினம் கனம் சிதைக்கும்.)

அதிகாரம்-31. குறள்-5.

37 தலைவர் நிலை.

எந்த விதத்திலும் எப்போதும் யாருக்கும் மனத்தினலுங்கூட தீங்கு நினைக்காதோர் எல்லார்க்கும் தலைவராவார். அதிகாரம்-32. குறள்-7.

38 நல்லவர்களின் செயல்.

பிற உயிர்களுக்கு தீங்கு செய்யாமல் காப்பவர்களைத்தான் பொதுமக்கள் நல்லவர்கள் என்று சொல்வார்கள். (அழிபவன்–அழிக்க நினைப்பான். வளர்பவன்-வளர்க்க நினைப்பான்.)

அதிகாரம்-33. குறள்-4.

39 காலத்தின் வேகத்தைக்கண்டு செயலாற்று.

நாள் நாள் என வந்துகொண்டிருப்பது இன்னதென்று புரிகிறதா? அதுதான் நம் உயிரை கொஞ்சம் கொஞ்சமாக சீவும் கத்தியாகும்.

அதிகாரம்-34. குறள்-4.

40 நீத்தார் கடமை.

நான் என்ற கர்வமும், எனதென்ற செருக்கும் இல்லாமல் நடுநிலைமையுடன் வாழ்பவர்களே உயர்ந்த ஞானத்துறவிகள் ஆவர்.

அதிகாரம்-35. குறள்-6.

41 மெய்யுணர்வே மேலானது.

கேட்டல், பார்த்தல், சுவைத்தல், முகர்தல், உணர்தல் என்ற ஐந்தறிவையும் பெற்றிருந்தாலும் இவ்வைந்தையும் காலம் இடம் தன்மையறிந்து நடத்தும் அறிவைப் பெறவில்லையானல் பயனற்றவனேயாவன்.

அதிகாரம்-37. குறள்-3.

42 போதும் என்ற நிலையில் நில்.

நிறைந்த நெஞ்சத்தோடு போதும் என்று வாழும் பேராசையற்ற நிலைக்கு ஈடு வேறொன்றும் கிடையாது.

அதிகாரம்-36. குறள்-4.

43 அவாவின் முதிர்ச்சி துன்பத்தில் முடியும்.

ஆசை வளர வளர துன்பம் வளர்ந்து கொண்டே வரும். ஆசையை ஓரளவில் நிறுத்தினல் தெளிவு பட்டு இன்பமுண்டாகும்.

அதிகாரம்-37. குறள்-8.

44 மெஞ்ஞானிகளே விஞ்ஞானிகளாம்.

நற்செயல், தீச்செயல், இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள் ஆகிய எல்லாவற்றினுடைய மூலத்தையுமறிந்து பொது நலத்திற்காகத் தொண்டு புரியும் துறவிகள், அறிஞர்களைத்தான் இவ்வுலகம் புகழ்ந்து கொண்டாடும். அதிகாரம்-3. குறள்-3.

45 ஐந்து அறிவையும் நன்கு உணர்

ஐந்து அறிவின் செயலையும் அதற்கு மேற்பட்ட தத்துவங்களையும் நன்கு தெரிந்த ஞானிகளே, உலகை, நடத்தும் தலைவர்கள் ஆவார்கள்.

அதிகாரம்-8. குறள்-1.

46 **தந்தை கடன்.**

தனது குழந்தைகளை பல அறிஞர்கள் கூடும் கூட்டங்களுக்கு அறிவுடன் கலந்துகொள்ளும் முறைகளில் வளர்க்கவேண்டும்.

அதிகாரம்-7. குறள்-7.

47 **இதுவுமது.**

பெண் குழந்தைகளை தக்க அறிஞராக்கி வயது வந்ததும் தகுதியுள்ள மணமகனைத் தேடி மணம் செய்வித்தல் வேண்டும். எதுபோல வென்றால், இல்லாதவர்க்கு கொடுத்துதவும் செல்வப் பொருளைப்போலப் பொருளை எதிர்பாராமல் கொடுத்துதவுதல் வேண்டும்.

அதிகாரம்-101. குறள்-7.

48 **மக்கள் கடன்.**

மக்கள் தாய் தந்தைகளுக்கு செய்யும் உணவுப் பொருள் உதவியானது அவர்கள் என்ன அறம் செய்தார்களோ என்று பலரும் புகழும் முறையில் பணிபுரிதல் வேண்டும்.

அதிகாரம்-7. குறள்-10.

49 **தாயின் மகிழ்வு.**

தனது குழந்தைகளை நல்ல அறிஞர்கள் என்று பிறர்கூறக் கேட்கும்போதுதான், குழந்தையைப் பெற்றோமென்ற எண்ணத்தில் மகிழ்வு நிறையும்

அதிகாரம்.7. குறள்-9.

50 உழைத்து வாழ்.

உனக்கென்று ஓர் தொழிலே அமைத்துக் கொள் அத்தொழில் நீ வேண்டியதை யெல்லாம் தரும். துணையாக ஒருவர் செய்யும் நன்மை அவ்வளவு தராது

அதிகாரம்-66. குறள்-1.

51 எண்ணித்துணி.

உனது தொழிலேச் செய்யும்போது அத்தொழிலின் கொள்முதல், அத்தொழிலேச் செய்யும் கருவி, அதைச் செய்யவேண்டிய காலம், அத்தொழிலின் ஒழுங்கு, அதற்கான இடம், இவ்வைந்தையும் நன்கு சிந்தித்து செய்யவேண்டும்.

அதிகாரம்-68. குறள்-5.

52 கேடும் நிலேயும் அனுபவ வடிவம்.

யார் யார் எப்படி இருந்து கெட்டார்கள் என்பதை நீ சிந்தித்துப் பார்த்து வாழ்வாயாக. உனது உயர்வான பொருளால் மயங்கி அதை மறந்து விடாதே.

அதிகாரம்-54. குறள்-9.

53 மக்களேத் தாழ்த்தாதே உயர்த்து.

நீ உன்னேவிட மெலிந்தவர்களே கண்டிக்கத் தொடங்குமுன் உனக்கு மேற்பட்ட வலிமையுடையாரிடத்து நீ இகழ்ப்பட்டால் எப்படி இருக்குமென்பதை எண்ணிப்பார்த்து மெலிந்தாரை நடத்து.

அதிகாரம்-25. குறள்-10.

54 பிளவை முளையிலே பிடுங்கு.

பகை போன்ற தீச்செயல்கள் எங்காவது முளைத்தால் அதை முளையிலேயே அழித்துவிட வேண்டும்.

அதிகாரம்-88. குறள்-9.

55 ஊனவீடு, ஞானவீடு இரண்டையும் தேடு.

உடம்பென்னும் சிறு வீட்டிலிருக்கும் உயிருக்கும் ஒரு வீட்டை அமைத்துக்கொள். உடம்பு வசிக்கும் வீடு இந்நாட்டுவீடு, உயிர் செல்லும் வீடு ஞான வீடு (ஞானம் என்பது பரந்த எண்ணத்தின் முடிவு) இவ்விரண்டையும் அமைப்பாயாக.

அதிகாரம்-34. குறள்-10.

56 வேடம் ஞானமல்ல

மொட்டையடித்துக்கொண்டும் அல்லது மயிரை சடையாக வளர்த்துக்கொண்டும் இருப்பதாலேயே உயர்ந்தவராக முடியாது. மற்றெப்படி ஆகலாமெனில் உலகப்பொது நீதிக்கு தீங்கிழைக்கும் தீச்செயல்களை நீக்கிவிட்டாலேயே உயர்ந்தவராக விளங்கலாம்.

அதிகாரம்-28. குறள்-10.

57 வெட்டெனப் பேசேல்.

நுட்பமான பேச்சுக்களைக் கேட்டுப் பழக்கமில்லாதவர்களேதான் எடுப்பாக, துடுக்காகக் கத்திப்பேசுவார்கள்.

அதிகாரம்-42. குறள்-9.

58 மனிதனுயர்வுக்கு அறிவே காரணம்.

அறிவுக்கல்வியைக் கல்லாதவர்கள் மிருகத்துக்கு சமானமாவர்கள் அறிவைக் கற்றோர்களே மனிதராவார்கள்.

அதிகாரம்-41. குறள்-10.

2619

59 மனிதர்களெல்லாம் மனிதராகார்.

மனித வடிவத்திற் கொத்த உறுப்புகள் அமைந்துள்ளதாலேயே மனிதரென்று கூற முடியாது. மனிதத்தன்மைக்கான குணங்கள் அமைந்திருந்தால் தான் மனிதராவார் (காது இருப்பதாலேயே கேட்க முடியாது அதில் கருவியுமிருக்கவேண்டும் என்றபடி)

அதிகாரம்-100. குறள்-3.

60 கெடுக்கும் குணமே கயமையாகும்.

மக்களைக்கெடுக்கும் ஓர்வகை உயிர்கள் உண்டு. அவ்வுயிர்களும் மக்களைப்போலவே உறுதாங்கி மக்களுடனேயே கலந்திருக்கின்றன. அக்கயமை வடிவம் போல வேறெவ்வுயிரிலும் இப்படி இருப்பதை நான் கண்டதே கிடையாது.

அதிகாரம்-108. குறள்-1.

பொருட்பால்

அரசியல் திட்டங்கள்.

1 அரசின் அங்கம்.

அரசாங்கத்திற்குத் தேவையான விரப்படைகளும், இன்பத்தோடுவாழும் சிறைந்த குடிகளும், குறைவற்ற உணவுப்பொருள்களின் விளைவுகளும், நல்ல மந்திரிகளும், உயர்ந்த அறிவுள்ள ஆலோசனையாளர்களும், நாட்டைப்பாதுகாக்கும் அரண்களும் பொருந்திய அரசாங்கமே தலைமையாட்சி ஆகும்

அதிகாரம்-39. குறள்-1.

2 அரசரின் இயல்பு.

எவ்வித நெருக்கடியிலும் அஞ்சாத நிலையும், தாராளமாக நற்செயல்களுக்குக் கொடுக்கும் ஈகையும்

எதையும் ஆராயும் அறிவும், ஊன்றிப்பார்த்து விடாப் பிடியாக சாதிக்கும் ஊக்கமும், அரசர்களுக்கு இயல் பாக அமைந்திருக்கவேண்டும்.

அதிகாரம்-39. குறள்-2.

3 அரசரின் குணம்.

நாட்டை ஆளும் அரசனுக்கு சோம்பலென்பதே அமையாமலும், எதையும் கற்கும் கல்வித்திறன் அமைந்தும், பின்வாங்காது செய்யும் துணிவும் பொருந் தியிருக்கவேண்டும்.

அதிகாரம்-39. குறள்-3.

4 அரசரின் ஆட்சி முறை.

அரசாங்க சட்டத்திற்கு மாறுபட்ட குற்றங்கள் நடக்குமாயின் அவைகளை நீக்கி அரச நீதிக்கு குறைவு வராமல் மான உணர்ச்சியோடு ஆட்சியை நடத்த வேண்டும்.

அதிகாரம்-39. குறள்-4.

5 அரசரின் செயல்கள்

அரசாங்கத்தில் பல புதுத்தொழில்களை காலத்திற் கேற்ப இயற்றலும், அதனல் அரசாங்கத்திற்கு பொருள் சேர்த்தலும், அப்பொருள்களைக் காத்தலும் காத்தபொருள்களை நாட்டுமக்களின் நலத்துக்காக செலவு செய்தலும் அரசரின் திறமையான செயல் களாகும்.

அதிகாரம்-39. குறள்-5.

6 அரசரின் நடத்தை.

அறிஞர்கள் கலந்து பேச விரும்பினல் தாராள மாக இடமளித்தும், பிறர் மீது சிறிப்பேசும் குணமில் லாமலும் உள்ள அரசனை யாவரும் புகழ்ந்து கொண் டாடுவார்கள்.

அதிகாரம்-39. குறள்-6.

7 அரசரின் ஈகை.

குடிகளுக்குக் கொடுத்துதவ வேண்டியதை இன்சொலால் கொடுத்துதவு மரசனின் சொல்லுக்குக் குடிகள் அடங்கி நடப்பார்கள்.

அதிகாரம்-39. குறள்-7.

8 அரசரின் நிலை

மக்களைக் காப்பாற்றும் முறையில் ஆட்சியை சீர்பட நடத்தும் மன்னவனே மக்களுக்கு தலைமையான இறைவனென்று கொள்ளப்படும்.

அதிகாரம்-39. குறள்-8.

9 அரசரின் பொறை.

குடிகள் தம் அறியாமையால் கடுஞ் சொற்களால் ஒன்றைச் சொன்னாலும் அதைப்பொறுத்துக்கொண்டு அச்சொற்களால் அவர்களின் கருத்தறிந்து அவர்களின் உள்ளங் குளிருமாறு பண்போடு உதவி செய்யும் அரசரின் கீழ் பல நாள் ஆட்சி நிலைத்து வாழும்.

அதிகாரம்-39. குறள்-9.

10 அரசரின் புகழ்.

கொடுத்துதவ வேண்டியதை அன்போடு கொடுத்தலும், கூறுவதை முகமலர்ந்து கூறுதலும், செங்கோலின் முறையறிந்து நடத்தலும், குடிகளின் தன்மையறிந்து ஒழுக்கமோடு காத்தலும் ஆகிய நான்கும் பொருந்திய வேந்தன் புகழோடு ஆட்சியை நடத்துவான்.

11 செங்கோல் முறைகள்.

தன் ஆட்சியின் கீழ்வாழும் குடிகள் குற்றம் செய்தால் அக்குற்றத்திற்குத் தக்க தண்டனை விதிக்கும்

போது யாருடைய தயவையும் பொருட்படுத்தாமல் நடுநிலையில் நின்று தனக்கு உதவியாக உள்ள கற்றோர் களின் உள்ளத்தைத் தெரிந்து பின் தண்டிப்பாராக. அதுவே முறையாகும்.

அதிகாரம்-55. குறள்-1.

12 இதுவுமது.

உலகமக்கள் எல்லாரும் மழையை நோக்கி வாழ் வார்கள். அதேபோல் ஒரு நாட்டுமக்கள் தங்கள் வாழ்க்கையமைப்புக்காக தன் அரசரின் செங்கோலை நோக்கி வாழ்வார்கள்.

அதிகாரம்-55. குறள்-2.

13 அறிஞரின் நீதி அரசியலால் வளரும்.

உயர்ந்த பேரறிஞர்கள் தங்களனுபவத்தால் எழு தியுள்ள கொள்கைகளும் ஒழுக்கங்களும் நீதிகளும் மன்னன் செங்கோலால்தான் வளரும்.

அதிகாரம்-55. குறள்-3.

14 குடிகள் மன்னன் உலகு

பெருநில மன்னன் தம் குடிகளோடு கலந்து ஒன் றுபட்ட நிலையில் தழுவி நின்று, அம்முறை மாறாமல் செங்கோலாட்சியை நடத்தி வருவரேல் அவ்வாட்சியை உலகமே வணங்கி நிற்கும்.

அதிகாரம்-55. குறள்-4.

15 இயற்கை வளர்ந்தால் எல்லாம் வளரும்.

இயற்கைத் தன்மையின் வழியறிந்து இயல்பு குணத்தின் பொருள்கள் கெடாமல் செங்கோலை நடத்த வழிகோலும் மன்னவனது நாட்டில் நல்ல மழையும் நல்ல விளைவும் பொருந்தி இன்பமடைவார் கள். அதிகாரம்-55. குறள்-5.

16 ஆயுதத்தைவிட அறிவு உயர்ந்தது.

செங்கோலின் சீர் முறை ஒழுக்கமாக நடந்து வருமானால் எதிரிகளை வெல்ல வேல் முதலிய ஆயுதங்கள் தேவையில்லை. (குடிகளே பிறர்க்கு இடந்தரார்.)

அதிகாரம்-55. குறள்-6.

17 ஒன்றை யொன்று காக்கும்.

நாட்டை அரசன் காப்பான் அரசனை செங்கோலின் நெறிதான் காக்கும். ஆதலால் செங்கோலாட்சியை நேர்பட நடத்தல் வேண்டும்.

அதிகாரம்-55. குறள்-7.

18 எண்ணம் கெட்டால் எல்லாம் கெடும்

விண்ணப்பித்துக்கொண்டவர்களுடைய கருத்தை நன்கு சிந்தித்து கற்றூர்களுடன் கலந்து ஆராய்ந்து முறையுடன் செங்கோலை நடத்தாத மன்னவனை பிறர் கெடுக்காவிடினும் தானே கெட்டுவிடுவான்.

அதிகாரம்-55. குறள்-8.

19 குற்றம் களைவதே தண்டனையாகும்.

குடிகளை வாழவிடாமல் தீங்கு செய்யும் குற்றவாளிகளை தண்டிப்பது அரசரின் கடமையாகும். அது குற்றமாகாது.

அதிகாரம்-55. குறள்-9.

20 கொல்லும் செயலுக்கு கொலையும் உண்டு.

பிறரைக் கொலை முதலிய தீங்கு செய்வதாகக் காணும் பெருங்குற்றத்திற்கு வேந்தர்கள் கொலை முதலிய தண்டனை விதிப்பது தகுதியாம். எதுபோ

லென்றால், உழவன் பயிர்கள்வளமுடன் வளரவேண்டி களைகளான செடிகளை பிடுங்கி விடுதல் போல என்பதாம்.

அதிகாரம்-55. குறள்-10.

21 கொடுங்கோல் முறைகள்.

பொருளுக்காக பேராசை கொண்டு மக்கள் சிரழியும் வண்ணம் கொடுங்கோல் நடத்தும் வேந்தன், கொலைசெய்து பிழைக்க நினைக்கும் கொடியருக்கு சமம் ஆவான்.

அதிகாரம்-56. குறள்-1.

22 இதுவுமது.

அரசனானவன் தன் குடிகளிடம் தன் ஆட்சியைக் காட்டி பணம் வாங்குவதானது, வழியில் கத்தியுடன் நின்று மிரட்டி வழிபறிக்கும் திருடனுக்கு சமானமாவான்.

அதிகாரம்-56. குறள்-2.

23 நாட்டின் நிலையை உணர்

அன்றன்றைய நிகழ்ச்சிகளை அவ்வப்போது நோக்கி தக்கன செய்யாத அரசனின் நாடு தினத்திற்குதினம் அழிந்து கொண்டேபோகும்.

அதிகாரம்-56. குறள்-3.

24 கோல் கோடினல் வாழ்வும் கோனும்

அரசநீதியின் முறையை உணராமல் தன் மனம் போல் ஆட்சியை நடத்தினல் ஊனவும் வாழ்க்கையும் சீர்கெடும்.

அதிகாரம்-56. குறள்-4.

25 அழுத கண்ணீர் ஆதிக்கத்தை அழிக்கும்

ஏழைமக்கள் துன்பந் தாளமாட்டாமல் வருந்தி அழும் முறையில் ஆட்சி நடத்தினால் அவ்வழுத கண்ணீரே ஆதிக்கத்தை அழிக்கவல்லதாகும்,

அதிகாரம்-56, குறள்-5,

26 நன்மை ஓங்கும் தீங்கு அழியும்.

மன்னர்கள் தனது செங்கோலின் நேர்மையால் தான் புகழ்பெற்று வாழ்வார்கள். செங்கோல் நெறி தவறி சீர்கெட்ட வழியில் நடத்துவதாலேயே மன்னர்கள் கேடுற்று அழிவதுமாகும்.

அதிகாரம்-56. குறள்-6.

27 ஆட்சியினின்பம் அனைவர்க்கும் கிடைக்கும்

மழையில்லையானால் உலகத்தில் எப்படி செயல் நிகழாதோ அதுபோல் அரசனிடம் அன்பில்லையானால் எவ்வித உயிர்களுக்கும் இன்பம் அமையாது.

அதிகாரம்-56. குறள்-7.

28 ஆளத்தெரியாத அரசனால் வாழ்வு கெடும்

ஒழுங்கு முறையோடு ஆட்சியை நடத்தத் தெரியாத மன்னவனின் கீழ் வாழுங்குடிகளுக்கு பொருளில்லாத துன்பத்தைவிட பொருளிருந்தும் துன்பமே கிடைக்கும்.

அதிகாரம்-56. குறள்-8.

29 இயற்கையை அறிந்து ஆட்சியை நடத்து

பூமியின் இயற்கைத் தன்மையையும், மக்களின் இயற்கைத் தன்மையையும் தெரிந்து முறையோடு ஆட்சி செலுத்தாத மன்னவனின் நாட்டில் மழையை இறக்கும் இயற்கை சக்திகுன்றிபருவமழைபெய்யாது.

அதிகாரம்-56. குறள்-9.

30 தொழிற்கல்வி அரசனுல்தான் வளரும்.

நாட்டைக் காக்கும் காவலன் உணர்ச்சியுடன் காக்கவில்லையானுல் நிகழ்ந்த செயலின் பலன் குறைவதோடு ஆறுவகைப்பட்ட கைத்தொழிலாளர்களும் தங்கள் தங்கள் தொழில் முறைகளை மறந்துவிடுவதால் இடுக்கண் விளையும்.

அதிகாரம்-56 குறள்-10.

31. மந்திரிகளின் தன்மை

அரசாங்க நிர்வாகத்திற்கு எவ்வெக்கருவிகள் தேவையோ அவைகளை எவ்வெக்காலத்தில் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்து அதை அம்முறைகளில் பயன்படுத்தி அதனுல் நல்லபலன் விளையும்படிச் செய்து அரசாங்கத்தை நடத்துவதே அமைச்சர்கள் பொதுச்செயலாகும்.

அதிகாரம்-64. குற-1.

32 மந்திரியின் தன்மை

துணிவோடு அருஞ்செயலாற்றியும், குடிகளை இரக்கமுடன் காத்தும், பல நூற்களைக் கற்றும், பல நுட்பங்களை அறிந்தும், முயற்சி குன்ருத ஊக்கம் மிகுந்தும், உள்ள இவ்வைந்துவகை யறிவும் அமைச்சரிடம் அமைந்து விளங்கவேண்டும்.

அதிகாரம்-64-குற-2.

33 அமைச்சரின் ஆற்றல்

ஆட்சியின் நீதிக்கு ஒத்துவராதாரை வேறு பிரித்தலும், மக்களிடம் இரக்கமுடன் ஒன்றுபட்டு வாழ்பவரை சேர்த்துக்கொளலும், பிரிந்து வாழ்ப்வர் குணம் ஒத்துவரின் பொருந்திக்கொள்ளவும் வல்லமை உடையதே அமைச்சு எனப்படும். அதிகாரம்-64. குறள்-3.

34 அமைச்சரின் நிர்வாகம்

நல்லவை தீயவைகளை குறிப்பால் தெரிந்துக்கொள்ளவும், பல செயல்கள் ஒரேகாலத்தில் தோன்றினாலும் அதில் நீதி, அநீதியை தேர்ந்து தெளியவும், பல திட்டங்களை ஆராயும்போது இதுதான் சரி என ஒன்றை துணிந்து நிலைப்படுத்தும் வல்லமையும் பொருந்தியவரே அமைச்சராவார்.

அதிகாரம்-64. குறள்-4.

35 அமைச்சரின் புலமை

அரசன் தர்பார் நடத்தும் சமயம் சுருக்கமாகவோ மயக்கமாகவோ எப்படி யார்கூறினாலும் அதன் உட்கருத்தறிந்து தனது கல்வியினாற்றலால் எங்கும் எப்போதும் நிலையுடையதான திறந்தெறிந்து விளக்கும். ஆற்றலை மந்திரி பெற்றிருக்கவேண்டும்.

அதிகாரம்-64. குறள்-5.

36 அமைச்சரின் ஆராய்ச்சி

தனது மேலான இயற்கையறிவோடு பல நூல்களின் அறிவையுங்கலந்து செயலாற்றினால் அதைவிட வேறு நுட்பம் தன்னை எதிரிட்டு நின்று வெல்லமுடியாது.

அதிகாரம்-64. குறள்-6.

37 இயற்கையுணர்வே செயற்கையில் வெல்லும்

செயற்கையின் பழக்க அறிவை எவ்வளவு படித்திருந்தாலும், உலக இயற்கையறிவு பொருந்தாமல், கல்வியறிவின் சக்தியளவில் செயலாற்றினால் அது பயன்படாது.

அதிகாரம்-64. குறள்-7.

38 அமைச்சரின் கடமை

அரசனிடம் ஒருவர் ஒன்றைக் கூறினால் அதை அரசன் விளங்கிக்கொள்ளாத நிலை அமையும்போது அதை இருவருக்கும் பொதுவாக விளக்கி அரசனுக்குத் தெளிவுபடுத்தும் திறமை மந்திரியின் கடமையாகும்.

அதிகாரம்-64. குறள்-8.

39 மந்திரியின் குற்றம்

உள்ளத்தில் பகைகொண்டு உடனிருந்தே கெடுக்கப் பார்க்கும் மந்திரியைவிட எதிர் நின்று போராடும் பகைவர், எழுபது கோடிக்கு மேல் நல்லவராவார்கள்.

அதிகாரம்-64. குறள்-9.

40 மந்திரியின் ஏமாற்றம்

ஒன்றை செய்வதற்கான எல்லா அமைப்புகளும் பொருந்தியிருந்தும், அச்செயலைச் செய்யாமல் ஏமாந்து விட்டுவிடும் செயல், திறமையற்ற மந்திரிகளிடம் உண்டு.

அதிகாரம்-64. குறள்-10.

41 ஒற்றர்கள் செயல்.

தம் நாட்டிலுள்ள மக்களுக்குள் நிகழ்வதை அவ்வப்போது ஒற்றர்கள்மூலம் அறிந்தும், அறிஞர்கள் தங்கள் கருத்துக்களை விளக்கியுள்ள நூல்களின் உரைகளை ஆய்ந்தும், மன்னர்கள் செயல் புரிவீராக.

அதிகாரம்-59. குறள்-1.

42 ஒற்றரின் பொது நோக்கு

ஒற்றர்கள் மன்னவன் மூலம், தம் அரசாங்க செயல் நடத்துவாரையும்; தனது சுற்றத்தாரையும்,

பகைவர்களையும், மற்றெல்லோரையுமே பொதுநோக்காக அறிவதே வல்லமையாகும்.

அதிகாரம்-59. குறள்-4.

43 ஒற்றரின் சொல்லுணர்தல்

ஒற்றர்கள் கண்டுபிடித்துவரும் செயல்களை அப்படியே நம்பிவிடுவதல்ல. மூன்று ஒற்றர்களை தனித்தனி கேட்டு அதில் ஒத்த கருத்தை தேர்ந்தெடுத்துக் கொள்வாராக.

அதிகாரம்-59. குறள்-9.

44 ஒற்றரின் புலமை

ஒற்றர்கள் தாம் கண்டுபிடித்ததை அரசரிடம் கூறும்போது தாம் இடையில் கண்ட காட்சிகளையெல்லாம் கூறிக்கொண்டிருக்கக்கூடாது. அதை விளக்கிக் கொண்டிருந்தால் மறைக்கவேண்டிய செயல்கள் வெளிப்பட்டு அரசருக்கு ஐயத்தை விளைவிக்கும்.

அதிகாரம்-59. குறள்-10.

தூது: (தூது எனப்படுவது ஒருவரின் கருத்தை மற்றவருக்குக் கூறி நடைபெறவேண்டிய செயலை நடத்திக்கொடுப்பது.)

45 தூதுவரின் குணம்

மக்கள்பால் அன்புடையவராயும் நற்குடியில் பிறந்தவராயும் அரசரும் மதிக்கத்தக்க நிலையமைந்தவராயும் உள்ளவர்களே தூதுரைப்பதற்குத் தகுதியுள்ளவராவார்கள்.

அதிகாரம்-69, குறள்-1.

46 **இதுவுமது.**

பரந்த நோக்கமுள்ள பேரறிவும், நல்ல திடமுள்ள உடலமைப்பும், பல நூலாராய்ச்சி மிகுந்த கல்வியும் இம்மூன்றையும் நிர்வகிக்கும் ஆற்றலுமுள்ளவர்களே தூதுக்குப் போகக்கடவர்.

அதிகாரம்-69. குறள்-4.

47 **தூதுவரின் திறமை.**

தூதுக்குப் போகிறவர்கள் தாம் கூறும் சொற்களை சுருங்கக்கூறி அவர் பதில் சொல்வதில் உள்ள குற்றங்களைப் பொருட்படுத்தாமல் மகிழ்வோடு சிரிக்கப்பேசி தாம் எடுத்துக்கொண்ட செயலை நடத்துவதே தூதின் பலனாகும்.

அதிகாரம்-69. குறள்-5.

48 **இதுவுமது**

தனது கடமையை அறிந்து, அச் செயலுக்குத் தக்க காலத்தையுமறிந்து, அச்செயலுக்குத் தகுதியான இடத்தைத் தெரிந்து, அவ்வமைப்பையெல்லாம் எண்ணிப்பார்த்து பேசி முடிப்பதே தூதுவரின் தலைமையாயினர் செயல்களாகும்.

அதிகாரம்-69. குறள்-7.

49 **தூதுவரின் இயல்பு.**

ஒருவரின் உள்ளக் கிடக்கையை அறிந்து மற்றவரின் உள்ளத்திற்கு பொருந்த உரைத்து வெற்றி காணும் தூதுவரின் உள்ளம் தூய்மையுடையதாகவும், தக்கத்துணைவர்களின் உதவி மிகுந்தவராகவும், துணிவு பொருந்தினவராகவும் இம் மூன்றையும் வாய்மையோடு நடத்தும் குணமமைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

அதிகாரம்-69. குறள்-8.

50 இதுவுமது.

தூதுரைப்போர்கள் அரசர்களுக்கும் நீதி கூறுபவர்களாதலால் வாய் தவறியும் குற்றமான சொற்கள் பேசாமல் காக்கவேண்டும்.

அதிகாரம்.69. குறள்-9.

51 பெரியார்களைத் துணைகோளல்.

அரசர்கள், நாட்டின் சீர் முறை தெரிந்த உயர்ந்த அறிஞர்களைத் துணைவர்களாகத் தேர்ந்தெடுத்து ஆலோசனையாளராக வைத்துக்கொளல் வேண்டும்.

அதிகாரம்-45. குறள்-1.

52 அரிதிலு மரிது.

பெரியார்களைப் பாதுகாத்து அவர்களைத்தம் சுற்றத்தாராக ஆக்கிக் கொள்வது இவ்வுலகில் அரிய செயலிலெல்லாம் அரியதாகும்.

அதிகாரம்-45. குறள்-3.

53 இதுவுமது

நமக்காக தேர்ந்தெடுத்தப் பெரியார்கள் நாம் செய்யவேண்டிய நிர்வாகங்களை தங்களின் கண்களாகவே கருதி நடத்தலால் உடனே பெரியார்களைத் தேர்ந்து கொள்ளக்கடவர்.

அதிகாரம்-45. குறள்-5.

54 அஞ்சாதுரைப்பது மெஞ்ஞானிகளே.

எவ்வளவு பெரிய ஆதிக்கத்திலுயர்ந்து விளங்கினாலும் அவர்பால் காணும் குற்றத்தை இடித்து எடுத்துரைக்கும் ஆற்றல் பெரியார்களுக்கே உண்டு. அப்

படிப்பட்ட பெரியார்களைத் துணைகொள்ளாத மன்னவன் பிறர் கெடுக்காமலேயே தானே கெடுத்துக்கொள்வான்.

அதிகாரம்-45. குறள்-8.

55 அறிஞர்கள் நட்பை கைவிடாதே.

நல்லவர்களாகிய பெரியோர்களின் நட்பை அவமதித்து அவர்களின் தொடர்பை நீக்கிக் கொள்ளுவது பல்லோரின் பகையைவிட பத்து மடங்கு தீமையைச் செய்துகொண்டதாகும்.

அதிகாரம்-45. குறள்-10.

56 அரசியலார் செய்யவேண்டிய கடமைகள்

கட்டாயக் கல்வி,

எவ்விதத்திலும் அழியாமல் உடனிருந்து துணை புரிவது கல்வி ஒன்றேயாகும் அக்கல்விக்கு ஈடு மற்றெதையும் கூற முடியாது.

அதிகாரம்-40. குறள்-10.

57 இதுவுமது.

கல்லாதவனின் நிலை எண்ணிக்கைக்காக ஒருவன் இருக்கிறன் என்பதைத் தவிர வேறு எவ்வித செயலுக்கும் முறையறிந்து உதவாதானேயாகிறன், எதுபோலென்றல் ஒருபயனும் தராத களர் நிலத்தைப் போல, ஆதலால் குழந்தைகட்கு கட்டாயம் கல்வியை கற்பிப்பாராக.

அதிகாரம்-41. குறள்-6.

58 முதியோர்க்கல்வி.

எவருடனாவது கலந்து பேசவோ எங்காவது சென்று பலவழிகளை யுணரவோ உதவியான கல்வியை

சாகும்வரைக்கும் கல்லாமலேயே இருக்கிறீர்களே அது ஏன்? (எந்த வயதிலும் கற்கலாம் என்பது கருத்து).

அதிகாரம்-40. குறள்-7.

59 குற்றங்கள்

செருக்கித்திரிதல் சினந்து பேசித்திரிதல் காமத்தால் சிறுமைபுரிந்து திரிதல் ஆகிய குற்றங்களை நீக்க வேண்டும்.

அதிகாரம்-44. குறள்-1.

60 சிறிய குற்றத்திற்கு இடம்கொடுத்தால் அதுதான் பெரியதாகும்.

தினைத்துணையளவு குற்றம் சிலநாளில் பனையளவாக படர்ந்துவளரும். ஆதலால் ஆரம்பத்திலேயே நீக்கவேண்டும்.

அதிகாரம்-44. குறள்-3.

61 பெருமைபேசி காலம் கடத்தாதே.

ஒரு செயலை நடத்தும் அமைப்பு கிடைத்தபோது அச்செயலை நடத்தி பயன் பெருமல் தன் பெருமையையே பேசி காலம் கடத்துமொருவன் விரைந்து கெடுவான்.

அதிகாரம்-47. குறள்-4.

62 வாழ்க்கை வழி

மக்கள் தங்கள் வாழ்க்கையில் எப்படி நடந்தால் நன்மைகிடைக்கும். எதைத்தவறினல் தீமை கிடைக்கும் என்று தெரிந்து நன்மையை அடையும் வழிகளை தெளிவுபடுத்தும் முறையில் ஆட்சி நடைபெறவேண்டும்.

அதிகாரம்-52. குறள்-1.

63 நல்லவன்யார்.

தன் நடத்தையில் அன்புடையவனாக நடந்தாலும், அறிவுடையசெயல் புரிந்தாலும், கலங்கிய மனமில்லாத தெளிந்த உள்ளத்தோடு விளங்கினாலும் பேராசை யற்று நீதியை ஏற்றவனாக தோன்றினாலும் அவனை நல்லவன் என்று முடிவு செய்துக்கொள்.

அதிகாரம்-52. குறள்-3.

64 இதுவுமது.

நல்லவர் என்று சில செயல்களால் தெரிந்தாலன்றி பிறர் உயர்த்திக்கூறுகிறாரென்று ஒருவனை அரசாங்கம் மேலாக மதிக்கக்கூடாது.

அதிகாரம்-52. குறள்-5.

65 ஒன்று கெட்டால் மற்றொன்றும் கெடும்.

மக்களின் செயல்கள் கெட்டவழியில் செல்லா விட்டால் உலகம் கெட்டுப்போகாதாகையால் மக்களின் செயல்களை மன்னவன் நாள்தோறும் ஆராய்ந்து நல்வழி செய்வாராக.

அதிகாரம்-52. குறள்-10.

66 கண்ணோட்டம்

நாட்டுமக்கள் எப்படி வாழ்கிறார்கள். என்னென்ன குறைபாடுகள் உள்ளன வென்று பிறர் கூறுமலேயே தெரிந்து கொள்ளும் கண்ணோட்டமோடு ஆளுவதே ஆட்சியாகும்.

அதிகாரம்-58. குறள்-2.

67 நாடு.

பசியுடையவரும் பிணியுடையவரும் உட்பகை யுடையவரும் இல்லாமலிருப்பதற்குத்தான் நாடு என்று பெயர்.

அதிகாரம்-74. குறள்-4.

68 இதுவுமது.

எல்லாவளங்களும் நிறைந்து எவ்வித நெருக்கடி யையும் சமாளித்துக்கொள்ளும் வளமமைந்ததே நாடு எனப்படும். அதிகாரம்-74. குறள்-2.

69 அரண்.

பிறர் மருளும் நிலையான உயரமும் படைகளுக்குத் தக்க அகலமும் எவ்விதத்திலும் உடையாத பலமும் எங்கும் இல்லாத அருமையும் உடையதான அரண்கள் நாட்டுப் பாதுகாவல்களாக இருக்கவேண்டும்.

அதிகாரம்-75. குறள்-3.

70 படைகள்.

எதிரி படையுடன் காலமும் சேர்ந்து முடிவுகட் டும் நிலை ஏற்பட்டாலும் அப்படையைக் கண்டு அஞ் சாமல் எதிர் நின்று போராடும் ஆற்றலுடையதே படைகளாகும்.

அதிகாரம்-77. குறள்-5.

71 இதுவுமது.

படைகளில் நிறைய சேனைவீரர்கள் இருந்தாலும் அவர்களை தலைமை வகித்து நடத்தும் தலைவன் வல்ல வனுயில்லாத வழி படைகள் அழியும்.

அதிகாரம்-77. குறள்-10.

72 அறிஞர்கள் பொதுமொழிகளை மறுக்காதே.

உலக உண்மைகளை உணர்ந்த அறிஞர்கள் தங்கள் அனுபவத்தால் இவைஇவைகள் உண்மையென மொழிந்தால் அவைகளை ஆய்ந்துபாராமல் இல்லை என வீண்வாதம் செய்யக்கூடாது. அப்படிச்செய்பவனை பிடிவாதக் குணம் நிறைந்த வெறித்தன்மையுடையாரில் சேர்க்கப்படுவார்கள்.

அதிகாரம்-85. குறள்-10.

73 வரவுக்குத் தக்க செலவு செய்.

நமக்கு கிடைக்கும் பொருள் எவ்வளவோ அவ்வளவில் செலவு செய்யப்படல் வேண்டும். வரவுக்கு மேல் செலவு செய்யக்கூடாது. அதாவது வரும்வழி சிறிதானாலும் போம்வழி பெரிதாக இருக்கக்கூடாது.

அதிகாரம்-47. குறள்-8.

74 பொறுமையே வெல்லும்.

மனச் செருக்கின் மிகுதியால் பலதீச் செயல்களை வீண்மிரட்டுதலால் செய்ய முற்படும் அறிவீனர்களை அன்பு நிறைந்த பொறுமையாலேயே வென்றுவிடலாம் (பொங்கும் குணம் நீடிக்காது. பொறையுடைமை நீடிக்கும்.

அதிகாரம்-15. குறள்-8.

75 தூற்றித்திரியேல்.

ஒருவரைப்பற்றி ஏதாவது சொல்லவேண்டுமானால் அவர் எதிரில் உள்ளபோது எப்படிவேண்டுமானாலும் சொல். ஆனால் ஒருவர் இல்லாதபோது அவரைப்பற்றி யாரிடத்தும் எதையும் பேசாதே.

அதிகாரம்-18. குறள்-4.

76 **கற்றும் கல்லாதவர் ஆதல்**

கற்கவேண்டியனவற்றைக் கற்றிருந்தும் அறிய வேண்டியனவற்றை அறிந்திருந்தும், நல்லோர்கள் கூடியுள்ள சபையிற் கலந்துபேச அஞ்சுவராயின் அக் கற்றோர் ஒன்றையும் கல்லாதவரினும் கடைப்பட் டோராவர். அதிகாரம்-72. குறள்-9

77 **அறிஞர் அரிய செயல் செய்வர்.**

எவ்வளவு நுட்பமான அறிவைப் பெற்று வ லமை யுடையாராயிருந்தபோதிலும் அந்நுட்பமான அறிவால் மக்கள் வாழ்க்கைக்கான செயல் ஒன்றும் செய்யப்பட வில்லையானல் அவரை உலகத்தார் மதிக் மாட்டார்கள். அதிகாரம்-67. குறள்-10

78 **ஆபத்தில் உதவி செய்யாதவனை நினைக்காதே.**

ஓர் குடும்பம் தொழில் முதலிய குறைகளால் கெடும் நிலை நேர்ந்தால் அக்குடும்பத்தைச் சூழ்ந்துள்ள பிற குடும்பத்தாரால் காக்கப்படல் வேண்டும். அப் படியின்றி கெடும் குடும்பத்தைப்பார்த்துக் கொண்டே இருந்து யாதொரு உதவியும் செய்யாதாரை நினைக் கினும் உள்ளம் சுடுவதாகும். அதிகாரம்-79. குறள்-9

79 **புலவர்கள் செயல்.**

ஒவ்வொருவர்களையும் உள்ளன்போடு கலந்து உற வாடி பின் பிளவு படாதவாறு, பிரிந்தாலும் வருந் மாறு நடந்துக்கொள்வதே புலவர்கள் தொழிலாகும் (ஒன்றுபடக் கலந்தலால் பிரியாமல் புலவர் வாழ்வார்.

அதிகாரம்-40. குறள்-4

வாழ்க திருக்குறள்.

Lobo Prabhu Press, Shevapet, Salem Q.H. No. S. 41-B • 2000 • 28-8-46.

திருக்குறள் பதிப்பக வெளியீடுகளுக்கு இதுவரை பொருளுதவி செய்த சங்கங்களும், பெரியார்களும்.

இராசிபுரம் கலைவளர்ச்சிக் கழகம்		25	0	0
கைத்தறி நெசவாளர் சங்கம்		5	0	0
ஜவஹர் தேசிய வாலிபர் சங்கம்		5	0	0
தையல் தொழிலாளர் சங்கம்		5	0	0
உயர்திரு. கு. பொ. வேலாயுத செட்டியார்		25	0	0
,,	இ. ரா. அ. ராமலிங்க செட்டியார்	15	0	0
,,	M. S. T. சவுண்டப்ப செட்டியார்	15	0	0
,,	B. K. கிருஷ்ணசாமி செட்டியார்	11	0	0
,,	இரா. வ. பார்த்தசாரதி	11	0	0
,,	விக்டரி மில்ஸ். P.M.P.A. சித்தப்பசெட்டியார்	11	0	0
,,	... ஆ. வெங்கடாசல செட்டியார் }			
,,	கொ. மாணிக்கம் செட்டியார் }	11	0	0
,,	பா. கு. அத்தப்ப செட்டியார்	11	0	0
,,	B. M. மாரி செட்டியார்	11	0	0
,,	வைத்தியர் S. பழனிசாமி அய்ய	10	0	0
,,	T.L. ஏகாம்பர அய்யர்	10	0	0
,,	R. M. மாரியப்ப முதலியார்	10	0	0
,,	புதுப்பாளையம் P.V. சின்னமுத்துசாமி உடையார்	5	0	0
,,	A. சுப்பராய உடையார்	5	0	0
,,	R. சிராங்கன்	5	0	0
,,	க. அ. கந்தசாமி செட்டியார்	5	0	0
,,	க. அ. சி. அர்த்தனாரி செட்டியார்	5	0	0
,,	S. கிருஷ்ணன்	5	0	0
,,	இ. ஆ. சின்னுசாமி செட்டியார்	5	0	0
	ஆக ரூ.	226	0	0

திருவள்ளுவரின் உட்கருத்துக்களையெல்லாம் வெளியிட்டு ம் நாட்டை உலகம் புகழும் நிலையிலிருந்து வழுவாதபடி காத்து ம் மக்களை அறிவியக்கத்தில் உயர்த்த இவ்வழி சிறந்தவழியாயிருப் பதால் தாராளமாக இப்பணிக்கு பொருளுதவி செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். பொருளுதவி புரியுமாறு வள்ளுவர் உங்கள் உள்ளத்தைத் தூண்டும் அப்பொழுதே பதிப்பகத்திற்கு அனுப்பி விடுங்கள்.

அவ்வப்போது வெளிவரும் பதிப்பில் உங்கள் பெயரும் உரிய பொருளையும் பதிவு செய்யப்படும்.

இராசிபுரம் திருக்குறள் பதிப்பக வெளியீடுகள்.

உயர் திரு. மகோ மகோபாத்தியாய பண்டிதமணி கதிரேச செட்டியார். தமிழாராய்ச்சித் துறைத்தலைவர் ராவ்சாகேப், S. வையாபுரி பிள்ளை. யோகி, சுத்தா னந்த பாரதியார். கவிராஜ பண்டித ஜகவீர பாண்டியனார். பிரன்சிபால். A. இராம சாமி கவுண்டர். R.P. சேதுப்பிள்ளை தேசிய கவி. ராமலிங்கம் பிள்ளை போன்ற அரிய பெரியார் களின் மதிப்புரை களுடன் பொலியும்,

திருக்குறள் அந்தாதி	....	0	10	0
குழந்தை உள்ளம்	....	0	2	0
வள்ளுவர் வகுத்த நம்நாட்டு சட்டங்கள்		0	4	0

உடனே ஒவ்வொருவரும் நம் தமிழ் வேதத்தை வாங்கிப் படியுங்கள். தங்கள் தோழர், சுற்றம் போன் றூர்களுக்கு வாங்கி அனுப்புங்கள்.

ஒவ்வொருவர்களையும் தமிழ்ப்புலவர்களாக பேச்சாளர் எழுத்தாளர்களாக ஆக்கிவைக்கும்.

"தமிழின் உயிர்நாடி

அல்லது

படிப்பதெப்படி"

என்ற பெரிய புத்தகம் 150-பக்கங்களுக்குமேல் விரைவில் வெளி வருகிறது. எதிர்பாருங்கள்.